## 250 அடி நீளத்தில் தொங்குபாலம்

# பறவைகளுக்காக வில்லிவாக்கம் ஏரியில் 8 தீவுகள் அமைக்கும் திட்டம் தீவிரம்

**மாநகராட்சி தகவல்**

**சென்னை, செப். 4 :** பறவைகள் வந்து செல்லும் வகையில் வில்லிவாக்கம் ஏரியில் 8 சிறிய தீவுகளை அமைக்க சென்னை மாநகராட்சி முடிவு செய்துள்ளது. மேலும் 250 நீளத்தில் தொங்கு பாலம் ஒன்றும் அமைக்கப்படுகிறது.

வில்லிவாக்கம் சிட்கோ நகர் பகுதியில் உள்ள வில்லிவாக்கம் ஏரி ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் ரூ.16 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டு வருகிறது. 39 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த ஏரி சென்னை குடிநீர் வாரியத்துக்கு சொந்தமானது. 39 ஏக்கரில் 24.64 ஏக்கர் நிலப்பரப்பில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக ஏரியை தூர்வாரும் பணி நடக்கிறது.

இதன் மூலம் ஏரியின் கொள்ளளவை 20,000 கன மீட்டரிலிருந்து 70,000 கனமீட்டராக அதிகரிக்க முடியும். இதன் பிறகு ஏரியை சுற்றி குழந்தைகள் பூங்கா, உடற்பயிற்சி மையம், நடைபயிற்சி பாதை, ஆவின் விற்பனை நிலையம், நுழைவாயில், பல்நோக்கு தாழ்வாரம், வாகன நிறுத்துமிடங்கள், விளையாடும் இடங்கள், திறந்தவெளி திரையரங்குகள், எல்.ஈ.டி. விளக்குகள், அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்படும்.

இந்நிலையில், ஏரியின் ஒரு கரையிலிருந்து மறு கரைக்கு செல்லும் வகையில் 250 அடியில் தொங்கு பாலம் ஒன்றை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான வரைபடத்தை அண்ணா பல்லைக்கழகம் தயாரித்து வருகிறது. மேலும் பறவைகள் வந்து செல்வதற்காக சிறிய தீவுகளை அமைக்கவும் சென்னை மாநகராட்சி முடிவு செய்துள்ளது.

இதுதொடர்பாக, மாநகராட்சி அதிகாரி கூறியதாவது:

ஏரியில் மொத்தம் 8 சிறிய தீவுகள் அமைக்கப்பட உள்ளன. ஏரிக்கு நடுவே ஆங்காங்கே திட்டு வடிவிலான அமைப்பு ஏற்படுத்தப்படும். இதில் தீவுகளில் மரங்கள் நடப்படும். அவைகள் முழுமையாக வளர்ந்த பின்பு அந்த தீவுகளுக்கு பறவைகள் வரத் தொடங்கும். பறவைகள் வரத் தொடங்கியவுடன் அங்கு செல்வதற்கான இணைப்பு துண்டிக்கப்படும். இதனால் அந்த இடத்திற்கு யாரும் செல்ல முடியாது. இதனால் அந்த இடம் பாதுகாப்பாக இருக்கும். இந்த திட்டத்திற்கு ஸ்மார்ட் சிட்டி நிறுவனம் அனுமதி அளித்தவுடன் பணிகள் தொடங்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.